# தமிழ்நாடு வேலைவாய்ப்பற்ற பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வகை மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம்

1. (அரசு ஆணை (நிலை) எண். 113, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந 4) துறை, நாள். 22.08.2008)
2. (அரசு ஆணை (நிலை) எண். 166, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந 4) துறை, நாள். 19.11.2008)
3. (அரசு ஆணை (நிலை) எண். 63, மாற்றுத்திறனாளிகள் நல (மா.தி.ந.2.2)த் துறை. நாள். 11.11.2011)
4. (அரசு ஆணை (நிலை) எண். 21, மாற்றுத்திறனாளிகள் நல (மா.தி.ந. 3)த் துறை, நாள். 23.03.2015)
5. (அரசாணை (நிலை) எண். 01, மாற்றுத்திறனாளிகள் நல (மா.தி.ந. 2,1)த் துறை, நாள். 30.01.2017)

## <u>உதவித்தொகை விவரம்</u>

| | | |
|---|---|---|
| **பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு கீழ் படித்தவர்களுக்கு** | **–** | **மாதம் ரூ.600/–** |
| **+2 வகுப்பில் தேர்ச்சி / அதற்கு சமமான தகுதி பெற்றவர்களுக்கு** | **–** | **மாதம் ரூ.750/–** |
| **பட்டதாரிகள் / முதுகலைப் பட்டதாரிகளுக்கு** | **–** | **மாதம் ரூ.1,000/–** |

விண்ணப்ப எண்.

வேலைவாய்ப்பகத்தின் முத்திரை (தேதியுடன்)

**<u>உதவித்தொகை பெறுவதற்குரிய தகுதிகள்</u>**

**<u>1. கல்வித்தகுதி</u>:**

(அ) பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் அதற்குக் கீழ் படித்தவர்கள்

(ஆ) +2 வகுப்பில் தேர்ச்சி / அதற்கு சமமான தகுதியினர்
(பட்டயப் படிப்பு இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தோர் போன்றவர்கள்)

(இ) பட்டதாரிகள் / முதுகலைப் பட்டதாரிகள் / தொழிற்கல்வி
(பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், விவசாயம், சட்டம் போன்ற தொழிற் பட்டப் படிப்புகள் நீங்கலாக).

**<u>2. ஊனத்தின் தன்மை:</u>**

விண்ணப்பதாரர் பார்வையற்றவர் / கை / கால் ஊனமுற்றவர் / காது கேளாதவர் / மனவளர்ச்சி குன்றியவராக இருக்க வேண்டும்.

**<u>3. தேசியஊனமுற்றோர் அடையாள அட்டை</u>:**

மருத்துவக் குழுவினரால் வழங்கப்பட்ட தேசிய ஊனமுற்றோர் அடையாள அட்டையை விண்ணப்பதாரர் பெற்றிருத்தல் வேண்டும்.

**<u>4. பதிவு செய்து காத்திருப்புக் காலம்</u>:**

––––––––– ஆம் ஆண்டு ––––––– திங்கள் –––––––ஆம் நாளில் ஓராண்டுக்குக் குறையாது வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து வேலைக்கு காத்திருக்க வேண்டும்.

**<u>5. வருமானம்</u>:**

அரசு ஆணை (நிலை) எண்.31 மாற்றுத்திறனாளிகள் நலத்(மா..தி.ந.2) துறை, நாள்.28.06.2010–ல் வருமான உச்சவரம்பு முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது.

**<u>6. வயது வரம்பு</u>:**

அரசாணை (நிலை) எண்.01, மாற்றுத்திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த்துறை, நாள்.31.01.2017–இன் படி வேலைவாய்ப்பு உதவித்தொகை பெறுவதற்கான வயது வரம்பு ஏதுமில்லை.

**7. இருப்பிடம்:**

விண்ணப்பதாரர் தம்முடைய பள்ளிக்கல்வி அல்லது கல்லூரிக் கல்வியை முழுமையாகத் தமிழ்நாட்டிலேயே படித்திருக்க வேண்டும் அல்லது அவருடைய பெற்றோர்களில் ஒருவர் அல்லது காப்பாளர் 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் தமிழகத்தில் வசித்து வந்திருக்க வேண்டும்.

**8. வேலைவாய்ப்பின்மை:**

விண்ணப்பதாரர் அரசுத்துறை / தனியார் துறையில் எந்தவிதமான ஊதியம் பெறும் பணியிலோ அல்லது சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டவராகவோ இருத்தல் கூடாது. மேலும் விண்ணப்பதாரர் தனியாரிடமிருந்தோ அல்லது அரசிடமிருந்தோ வேறு எந்த வகையிலும் எந்தவிதமான உதவித்தொகையும் பெறுபவராக இருத்தல் கூடாது.

**9. பள்ளி கல்லூரிகளுக்கு அன்றாடம் சென்று பயிலும் மாணவ மாணவியர்கள்:**

விண்ணப்பதாரர் அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்கு சென்று பயிலும் மாணவ மாணவியராக (Regular Students) இருத்தல் கூடாது.இந்த நிபந்தனை தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல்வழிக் கல்வி கற்கும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

**10. ஏற்கனவே பயன் பெற்றவர்கள்:**

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு 1993 இல் நிறுத்தம் செய்யப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மனுதாரர்களுக்கு இப்புதிய வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகின்ற வயது வரம்புகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

**விண்ணப்பித்தல் மற்றும் தொடர்ந்து பயன்பெறுதல் பற்றிய விவரம்:**

1. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம் கிடைத்த 30 நாட்களுக்குள் தனது மாவட்டத்திற்குள் உள்ள தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் கிளையில் சேமிப்புக் கணக்கைத் (Savings Bank account) தொடங்கி கணக்கு எண்.(Account Number) கிளையின் முழு முகவரி உள்ளிட்ட விவரங்களை விண்ணப்பப் படிவத்தில் அமைந்துள்ளவாறு தெரிவிக்க வேண்டும்.

2. வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை காலாண்டு ரீதியில் கணக்கீடு செய்யப்பட்டு அந்தந்தக் காலாண்டு முடிவுற்ற பின்னர் விண்ணப்பதாரருடைய கணக்கில் செலுத்தப்படும்.

3. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைஉச்ச வயது வரம்பினை கணக்கில் கொள்ளாது 10 ஆண்டு காலம் அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரையிலும் வழங்கப்படும். 45 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் (PHP) பெறவில்லை என சுயசான்று அளிக்க வேண்டும்.

4. வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற்றுவரும் காலத்தில் அரசுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ பணிநியமனம் பெற்றாலோ அல்லது சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டாலோ அது தொடர்பான விபரங்களை உடனடியாக உரிய வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டியது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். அரசுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ பணிநியமனம் பெற்றாலோ அல்லது சுயவேலைவாய்ப்பில் ஈடுபட்டாலோ வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்குவது நிறுத்தம் செய்யப்படும்.

5. பார்வையற்றோர், இதரவகை மாற்றுத்திறனாளிகள், மனவளர்ச்சி குன்றியோர், காதுகேளாதோருக்கும் (பதிவைப் புதுப்பிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது).

6. உண்மைக்கு மாறான விவரங்கள் அளித்து உதவித்தொகை பெறுபவரின் பதிவு இரத்து செய்யப்படும்.

7. இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவோர் தாம் அனுமதிக்கப்பட்ட அதே மாதத்தில் அடுத்து வரும் ஒவ்வொரு நிதியாண்டிலும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சுயஉறுதி ஆவணத்தை (Self affidavit) உரிய வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வமயம் வங்கிக் கணக்குப் புத்தகம், வேலைவாய்ப்பு அலுவலக புதுப்பித்தல் அடையாள அட்டை மற்றும் இதர சான்றிதழ்களையும் கொண்டு வர வேண்டும்.

8. ஒவ்வோர் ஆண்டிலும் சுயஉறுதி ஆவணத்தை அளிக்க வேண்டும்.